# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்வர்தன சபா (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஒற்றோபர் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 10.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்வர்தன சபா (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ.கூட்டி. 16 /2004*

### சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்கவர்தன சபாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்கவர்தன சபா" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரையுடன் இணைந்தனவும் தொடர்புபட்டனவுமான, சகல விஹாரைகள், தியான இல்லங்கள், வழிபாட்டுத் தலங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை அபிவிருத்திசெய்து பராமரிக்கும் நோக்கத்திற்காகவும் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் இதற்குமுன் சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரை உருவாக்கப்பட்டிருந்ததாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்கவர்தன சபா (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்கவர்தன சபாவைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது உறுப்பினர்களாகவுள்ள சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்கவர்தன சபா அபிவிருத்திச் சங்கத்தின் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உறுப்பினர்களாகத் தற்போதுள்ள அல்லது இத்தால் அமைத்துரு

வாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் "சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விகாரஸ்த்த சங்கவர்தன சபா" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் எந்தக் குறிக்கோள்களுக்காக அமைத்துரு வாக்கப்படுகின்றதோ அந்தக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விஹாரைக்குத் தேவையான கட்டிடங்களையும் வேறு உட்கட்டமைப்பு வசதிகளையும் நிர்மாணித்தலும் பேணுதலும் ;

(ஆ) சீத்தாவாக்க மானியங்கம ரஜமகா விஹாரையில் வதியும் பிக்குகளுக்கு அவசியமான கல்வி வசதிகளையும் அவர்களது அன்றாட தேவைகளையும் வழங்குதல் ;

(இ) பௌத்த மதத்தையும் பௌத்த மதக் கோட்பாட்டையும் பற்றிய கற்கைகளையும் ஆராய்ச்சியையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பௌத்த பிக்குகளுக்கும், பௌத்தர்களுக்கும் புலமைப்பரிசில்களையும் ஆதாரவூதியத் திட்டங்களையும் பரிசுகளையும் ஏழைக்கல்வி உதவிகளையும் வழங்குதல் ;

(ஈ) பௌத்த சாசனத்தைப் பேணி வளர்த்தலும் ஊக்குவித்தலும் பாதுகாத்தலும் ; அத்துடன் புத்தபெருமானின் போதனைகளையும் பௌத்த மதத்தின் விழுமியங்களையும் பௌத்தர்களிடையே மனதில் பதியச் செய்தல் ;

(உ) மகா சங்கவுக்குத் தோதான கல்விப் பயிற்சியை வழங்குதல் ;

(ஊ) பௌத்தர்களின் நன்மைக்காக தம்ம பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் உட்பட கல்வி நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும் ; அத்துடன்

(எ) பௌத்தர்களின் நலனுக்காக நூலகங்கள், தகவல் மற்றும் வளத்துறை நிலையங்கள் என்பவற்றைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஏ) பௌத்த திருவிழாக்கள், சமயசாரங்கள், சேவைகள் நடைமுறைகள் மற்றும் மரபுகளை மேம்படுத்தல் ; அத்துடன்

(ஐ) சமூகநலன் கலாசார மற்றும் சமூக அபிவிருத்திச் சேவைகளை அமுலாக்குவதில் ஈடுபடுதலும் அவற்றை மேம்படுத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவையேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடன் எடுக்கவும் அல்லது திரட்டவும் மானியங்களை, நன்கொடைகளைப் பெற அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய பதவிதாங்குனர்களையும் விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய வர்களும் அதற்கிணங்கத் தெரிவுசெய்யப்பட்டவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டுள்ள முகாமைச்சபையால் (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்றினால் முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று பதவிவகிக்கும் சங்கத்தின் முகாமைச்சபையின் உறுப்பினர்களைக் கொண் டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** *(1)* கூட்டுத்தாபனம், காலத்திற்குக்காலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும் பான்மை வாக்குகள் மூலமும், இச்சட்டத்தின் அல்லது வேறே தேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதன வாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும். உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற் றுக்காகவும் பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்வதற்காகவும், பதவிதாங்குநர்கள், சபை மற்றும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் கடமைகள் புரியப்படுவதற்காகவும் கூட்டுத்தாபனத்தினதும் சபையினதும் கூட்டங்களின் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும் அத்துடன் பொதுவாக வேறுவகையில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்து வதற்காகவுமான விதிகளாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்படும்போது அதே போன்ற ஒரு கூட்டத்திலும் அதேமுறை யிலும் மாற்றப்படலாம். அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் வருமானத்தினதும் செலவினத்தினதும் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது சபையால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத் தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக விருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாக இதற்கு முன்னர் அல்லது இதன் பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப் படற்பாலனவும் அதற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று இருக்கின்றதான சங்கத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தினத்தன்று சொல் லப்பட்ட சங்கத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் அதற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகை களும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியம், கொடை, இறுதிவிருப்பாணக்கையளிப்பு அல்லது வேறுவகை யாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவற்ற அல்லது அசைவுள்ள ஏதேனும் ஆனத்தை வைத்திருக்க சட்டப்படி இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, வாடகைக்கு விட, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத் துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படு தலும் வேண்டும்.

*கலைப்பின்மீது எஞ்சியிருப் பதான ஆதனம்.*

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்த பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும், அத்துடன் எந்த நிறுவனம் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அந்த வேறே தேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதான வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக் கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் உறுப்பினர்களால் கூட்டுத் தாபனம் கலைக்கப்படும்போது அல்லது கலைக்கப்படுவதற்கு உடன் முன்னராக சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும், செயலாளர் அல்லது பொருளாளரினதும் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சானத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். கூட்டுத் தாபனத்தின் இலச்சினை.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது. குடியரசின் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்